# அவளுக்குப் பெயர் பெண்!

■ காம்கேர் கே.புவனேஸ்வரி

19 வாழ்க்கையின் அப்லோடும், டவுன்லோடும்!

‘பெண் குழந்தைகள் முறைகேடான தொந்தரவுகளை அதிகம் சந்திப்பது உறவினர்கள், தெரிந்தவர்கள் மற்றும் குடும்ப நண்பர்களிடம்தான்’ என்கின்றன புள்ளிவிவரங்கள். குழந்தைகள் யாரையாவது பார்த்து பயந்தால், அவர்களை ஒதுக்கினால், ‘‘என்ன மரியாதை கொடுக்க மாட்டேன் என்கிறாய்? அங்கிளுக்கு ஹாய் சொல்லு... அண்ணனுக்கு ஷேக்கன் கொடு’’ என வற்புறுத்தக்கூடாது. குழந்தைகளின் தயக்கம் அல்லது பயத்தின் காரணத்தை நிதானமாகப் பேசி அறிய வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு உள்ளது.

அண்மையில் கோவை போத்தனூர் அருகே 66 வயது முதியவர், ‘எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. உனக்கு ஓகேவா?’ என்று 16 வயது சிறுமிக்குக் காதல் கடிதம் கொடுத்த விவகாரம் அனைவருக்குமே தெரிந்திருக்கும்.

சில மாதங்களுக்கு முன்னர் படித்த இன்னொரு செய்தி இது... ‘கோவை அருகே உள்ள சிறிய நகரம் ஒன்றில் ஓர் இலக்கிய விழா நடைபெற்றது. இலக்கிய விழாக்களுக்கு வழக்கமாக வரும் ஒருவர், பார்வையாளர்கள் வரிசையில் இருந்தார். அவர், பணியிலிருந்து ஓய்வு பெற்ற முதியவர். விழாவில் பேசிய பெண் பேச்சாளர் ஒருவர், சமீபத்தில் தனக்கு நடந்த திருமணம் பற்றி மேடையில் குறிப்பிட்டார். கூட்டம் முடிந்தவுடன் இன்னொரு பேச்சாளரை அந்த முதியவர் பரபரப்பாக அணுகினார். ‘பெண் பேச்சாளருக்கு திருமணம் ஆன விஷயம் எனக்குத் தெரியாது. போன வாரம்தான் என்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு அந்தப் பெண்ணுக்கு கடிதம் எழுதினேன். இப்போது என்ன செய்வது?’ என்று யோசனை கேட்டிருக்கிறார்.

அதே பெரியவர் அடுத்த சில வாரங்களிலேயே இன்னொரு கூட்டத்தில் பேசவந்த கல்லூரி மாணவி ஒருவரிடம் நேராகவே போய், அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக சொல்லியிருக்கிறார். ‘உங்கள் பெற்றோரிடம் பேச ஏற்பாடு செய்யுங்கள்’ என்றும் கேட்டார். அந்த இளம்பெண் அதிர்ந்துபோய் அங்கிருந்து நகர்ந்து விட்டார்.

65 வயது கடந்த அந்த முதியவர், தன் மனைவியை இழந்து ஓராண்டு ஆகியிருந்தது. ஆனால் இலக்கியப் பேச்சாளர்களாக இவர் ஏன் குறி வைத்தார் என்பது இன்றுவரை புரியாத புதிர்தான். இது ஒருவகை மனநோயாகக் கூட இருக்கலாம்.’



இதுதான் அந்த செய்தியின் சாராம்சம். இந்த முதியவராவது, இளம் பெண்களிடம் நேரடியாகத் தன் திருமண ஆசையைச் சொல்லியிருக்கிறார். எனக்குத் தெரிந்து நடுத்தர வயதில் இருக்கும் ஆண்களில் ஒரு சிலர், பிரபலமான / பிரபலமாகிக் கொண்டுவரும் பெண்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, ‘அவர்கள் என்னைத் திருமணம் செய்துகொள்ள ஆசைப்பட்டனர். நான் மறுத்துவிட்டேன்’ என்று சொல்லிக்கொண்டு அல்ப சந்தோஷத்தில் வளைய வருகிறார்கள். இவர்களை என்னவென்று சொல்வது?

தன் பத்து வயதுப் பேத்தியுடன் விளையாடுவதற்காக வீட்டுக்கு வரும் அவள் தோழியை பலவந்தப்படுத்தி வன்கொடுமை செய்த முதியவர் ஒருவரைப் பற்றிய செய்தி அண்மையில் வெளியானது. செய்தியில் வருவது இதுபோல ஒன்றிரண்டுதான். நம் கவனத்துக்கு வராமல் எத்தனையோ நிகழ்வுகள் நடக்கின்றன.

இவை எல்லாவற்றையும்விட அதிர்ச்சியான ஒன்றை சமீபத்தில் கேள்விப்பட்டேன். எங்கள் குடும்ப நண்பர். பத்து வருடங்களுக்கு முன்னர் கணவர் இறந்துவிட்டதால், அவர் மட்டும் கிராமத்து வீட்டில் தனியாக வசித்து வருகிறார். வயது 79. சௌகார் ஜானகி போல கம்பீரமாக இருப்பார். இப்போதும் நல்ல சுறுசுறுப்பு. பணி ஓய்வுபெற்று பென்ஷன் வாங்குகிறார். வீட்டின் மாடியில் ஒரு குடித்தனம். நாள் முழுவதும் துணையாகவும் வீட்டு வேலைக்கும் தோட்ட வேலைக்கும் ஒரு பணிப்பெண். வீட்டைச் சுற்றி தோட்டம். வெளிநாட்டில் மகன் இருக்க, இந்தியாவில் மகள் இருக்க, இவர் கிராமத்தில் இருக்கிறார். அவர்கள் அம்மாவிடம் அக்கறையாகவே இருக்கிறார்கள்.

தூரத்து உறவினர் ஒருவரிடமிருந்து அந்த அம்மாவுக்கு பல வருடங்கள் கழித்து போன் வந்திருக்கிறது. அவர் மனைவியை இழந்தவர். கிட்டத்தட்ட இவருடைய வயதில் இருப்பவர். சம்பிரதாயமாக நலன் விசாரித்தபோது, ‘‘எல்லோரும் அக்கறையாக இருக்கிறார்கள். எனக்குத்தான் தனியாக இந்த வீட்டில் பொழுது போகவில்லை’’ என்று வெகு இயல்பாக சொன்னார் அந்த அம்மா. அதற்கு எதிர்முனையிலிருந்து வந்த பதிலில் அவர் ஆடிப் போய்விட்டார்.

‘‘எனக்கும் மனைவி இல்லை, உங்களுக்கும் கணவர் இல்லை. நான் உங்களுடன் வந்து தங்கிக்கொள்கிறேன். முதலில் மாதம் இரண்டு மூன்று நாட்கள். பின்னர் ஒரு வாரம். அதன் பின்னர் ஒரு மாதம். அப்புறம் நிரந்தரமா சேர்ந்தே இருக்கலாம். இப்படிச் செய்தால் பார்ப்பவர்களுக்கும் சந்தேகம் வராது’’ என்று அந்த உறவினர் சொல்ல, இவர் வெலவெலத்துப் போய்விட்டார்.

அதிர்ச்சியில் ஏதும் பேசத் தோன்றாமல் அந்த அம்மா போனை வைத்துவிட, தொடர்ச்சியாக வாட்ஸ்அப் மூலம் இதையே கேட்டு அவர் தொந்தரவு செய்துள்ளார். இவருக்கு மகனிடமும் மகளிடமும் இது குறித்துச் சொல்வதற்கு கூச்சமாக இருந்தாலும், ஒரு கட்டத்தில் சொல்ல வேண்டியதாகிவிட்டது. அவரது பிள்ளைகள் இருவரும் அந்த உறவினருக்கு போன் செய்து, ‘‘எங்கள் அம்மாவைத் தொந்தரவு செய்யாதீர்கள்’’ என்று கண்டித்தார்கள். அதன்பிறகு பிரச்னை இல்லையாம்.

இதை எங்களிடம் பகிர்ந்துகொண்டவர், ‘‘79 வயதில் எனக்கு இதெல்லாம் தேவையா? வாய் வார்த்தைக்காகக்கூட மனதில் உள்ளதை சகஜமாக உறவினர்களிடமே பேசமுடிவதில்லை. இப்போதெல்லாம் யாரிடமும் நலன் விசாரிப்புக்குப் பிறகு எதையுமே பேசுவதில்லை’’ என்று வேதனையுடன் சொன்னார்.

பெண் குழந்தைகளின் குரலை பெற்றோர் பொறுமையாகக் கேட்க வேண்டும். வயதான அம்மாக்களின் பிரச்னைகளையும் பிள்ளைகள் கனிவாக அணுக வேண்டும். மகள், சகோதரி, மனைவி, தோழி, அம்மா, பாட்டி, கொள்ளுப் பாட்டி என எத்தனை அவதாரங்களை பெண்கள் எடுத்தாலும், அவர்கள் மீதான பார்வை ஒன்றுதான்... ‘அவள் ஒரு பெண்’. விதவிதமான பெயர்கள் பெண்களுக்கு இருந்தாலும் ‘அவள் ஒரு பெண்’ என்பதே பெண்களுக்கான பொதுப் பெயராக இருப்பது துயரமே!

காம்கேர்
கே.புவனேஸ்வரி

இந்த மாத அப்லோடும் டவுன்லோடும்!

